# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 160/8 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/8 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (50)/75.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

*பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மீது, சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

வி. கொபல்லவ,
சனாதிபதி.

நுவரெலியா,
1975, ஏப்பிறல் 19.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (உள்ளூராட்சி அதிகார சபைகளை இடைநிறுத்துகை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. எழுத்துருவிலான ஏதேனும் பிற சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், எழுத்துருவிலான சட்டம் எதன் கீழாயினும் முறைப்படி நிறுவப்பெற்ற ஏதேனும் உள்ளூராட்சி அதிகாரசபையினது நிருவாகமானது, இவ்வொழுங்கு விதிகளின்கீழ் நியமனஞ்செய்யப்பெற்ற தகுதிவாய்ந்த அதிகாரியினுடைய கட்டளையொன்றின்மீது, அந்த உள்ளூராட்சி அதிகாரசபை எந்நிர்வாகப் பிராந்தியத்தினுள் அமைந்துள்ளதோ அந்நிர்வாகப் பிராந்தியத்தினது உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மேல், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறையில் இருக்கும்வரை, அது வரை மட்டுமே, சுமத்தப்பட்டு இருக்கவேண்டுவதோடு அதற்கிணங்க, அத்தகைய உதவி ஆணையாளர், எழுத்துருவிலான எச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழேனும் முற்போந்த காலவெல்லையின்போது அவ்வுள்ளூராட்சி அதிகாரசபையினதும், தலைவரினதும், மாநகர சபைத் தலைவரினதும், எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிப்பதோடு எல்லாக் கடமைகளையும் புரிதலும் வேண்டும்.

3. ஒழுங்குவிதி 2 இல் "உள்ளூராட்சி அதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகர சபை, நகர சபை, பட்டின சபை அல்லது கிராமச் சபை எனப்பொருள்படும்.


இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.